1981 மார்ச் 6]

திரு. ப. செ. சென்னிமலை என்கிற கந்தசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சின்னதாராபுரம் பகுதிக்கு பள்ளிப்பட்டு, கரூர் ஆகிய பகுதிகளில் இருக்கிற பவர் ஹவுசிலிருந்துதான் மின்சாரம் சப்ளை செய்யப்படுகிறது. அவை சரிவர சப்ளை செய்யப்படாத காரணத்தால், அங்கேயுள்ள தொழிலாளர்கள் மிகவும் அவதியுறுகிறார்கள். இதைக் கருத்தில் கொண்டு, சின்னதாராபுரம் பகுதியில் ஒரு பவர் ஹவுஸ் கட்டும் திட்டத்தை அரசு மறு பரிசீலனை செய்ய முன் வருமா என்று அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, சின்னதாராபுரம் அருகே ஒரு துணை மின் நிலையம் அமைக்க வேண்டும் என்பதற்காக மின் தேவை வளர்ச்சி இப்பகுதிகளில் இருக்கிறதா என மின் வாரியத்தால் ஆராயப்பட்டு வருகிறது. அப்படிப்பட்ட வளர்ச்சி இருந்தால், துணை மின் நிலையம் அமைப்பது அவசியமா என்று பார்த்து பிறகு அனுமதி வழங்கப்படும் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

இராமசாமியாபுரத்தில் ஏற்பட்ட தீ விபத்து.

*வினா எண். 398—திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை அளிப்பாரா—

(அ) முகவை மாவட்டம், திருவில்லிபுத்தூர் தொகுதி இராமசாமியாபுரம் அரிசனக் குடியிருப்பில் 1980 ஜூன் இறுதி வாரத்தில் நூற்றுக்கும் மேற்பட்ட குடிசைகள் தீ விபத்தால் பாதிக்கப்பட்டது உண்மையா ?

(ஆ) ஆம் எனில், பாதிக்கப்பட்டவர்களுக்கு அரசு என்ன நிவாரணம் அளித்துள்ளது ?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : (அ) 1980-ஆம் ஆண்டு ஜூன் மாதம் 22-ஆம் நாள் அன்று காலை 11 மணி அளவில் தீ விபத்து ஏற்பட்டது. பாதிக் கப்பட்ட குடியிருப்புகளின் எண்ணிக்கை 20.

(ஆ) முழுதும் பாதிக்கப்பட்ட குடியிருப்புகள் 17-க்கு ஒவ்வொன்றுக்கும் ரூ. 200 வீதமும், பகுதி பாதிக்கப்பட்ட குடியிருப்புகள் 3-க்கு ஒவ்வொன்றுக்கும் ரூ. 50 வீதமும் வழங்கப்பட்டது. மற்றும் ஒவ்வொரு குடும்பத்துக்கும் 5 கிலோ அரிசியும், 1/2 லிட்டர் மண்ணெண்ணெயும், ஒரு வேட்டியும் ஒரு புடவையும் வழங்கப்பட்டது.

திரு. இரா. தாமரைக்கனி : பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், தீ பிடித்து அதனால் பாதிக்கப்பட்ட ஒவ்வொருவருக்கும் 200 ரூபாய் கொடுக்கப்படுவதாகக் சொன்னார்கள். அந்த மக்கள் மிக மிக ஏழை எளிய மக்களாதலால், அந்த 200 ரூபாயை வீடு கட்டிக் கொள்ளாமல் செலவு செய்து விடுகிறார்கள். இதனால் அவர்களுக்கு 200 ரூபாயைக் கொடுப்பதற்குப் பதிலாக தீ பிடிக்காத ஆஷ்பெஸ்டாஸ் சிமெண்ட் ஓடுகள் போட்டு வீடுகட்டும் வகையில் அவர்களுக்கு ஆஸ்பெஸ்டாஸ் சிமெண்ட் ஓடுகளை வாங்கி வழங்குவதற்கு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்?

அதேபோன்று சிறு தியேட்டர்கள் அதாவது கீத்து கொட்டகைகள் போட்ட தியேட்டர்கள் தீ பிடித்து எரிந்து 40 பேர்கள் பாதிக்கப்பட்டபோது இத்தகைய தியேட்டர்களுக்கு ஆஸ்பெஸ்டாஸ் சிமெண்ட் ஓடுகளைத்தான் போடவேண்டும் என்று அரசு ஆணையிட்டதே, அதைப்போல குடியிருப்புகளுக்கும் கீத்து கொட்டகைகள் போடக்கூடாது என்றும் ஆஸ்பெஸ்டாஷ் சிமெண்ட் ஓடுகள்தான் போட வேண்டும் என்றும் அரசு ஆணையிட முன் வருமா என்றும் அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியதிலிருந்து நான் தெரிந்து கொண்டது, செமி பர்மனென்ட் பெர்மிட் வழங்கப்பட்டுள்ள சினிமா தியேட்டர்களுக்கு ஏ. சி. ஷீட்டுகளை வாங்கிப் போடவேண்டும் என்று சொன்னது போல, இதுபோன்ற குடியிருப்புகளுக்கும் ஏ.சி.ஷீட்டுகளை அரசு வாங்கிப் போட வேண்டும் என்று சொல்கிறார் என நினைக்கிறேன். ஆனால் அவர்களுக்கு இழப்பு நிவாரணமாகக் கொடுக்கவேண்டும் என்று நிர்ணயிக்கப்பட்ட தொகை 200 ரூபாய்தான். அதற்குள் இந்த ஏ. சி. ஷீட்டுகளை வாங்கிக் கொடுக்க முடியாது. ஆனாலும் மற்ற ஓடுகளை வாங்கிப் போட்டுக்கொள்ள அது உதவியாக இருக்கும். அவர்களுக்கு ஒரு நிவாரண உதவியாக இந்த 200 ரூபாய் இப்போது கொடுக்கப்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. இரா. தாமரைக்கனி : பேரவைத் தலைவர் அவர்களே, நாட்டிலே தீ விபத்து தொடர்ந்து ஒரே இடத்திலே பல தடவைகள் நடைபெற்றுக்கொண்டு வருவது மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா? ஏன் நடைபெறுகின்றது என்பதைப் பற்றி அரசு ஆய்வு செய்ததா? கடந்த 3 ஆண்டுகளாக எத்தனை தீ விபத்துக்கள் ஏற்பட்டுள்ளது? அதற்காக இந்த அரசு எவ்வளவு தொகை நிவாரணமாக அளித்திருக்கின்றது என்பதை அறிய விரும்புகிறேன்?

1981 மார்ச் 6]

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு பூராவும் எங்கெங்கே தீ பற்றிக் கொண்டிருக்கின்றது என்ற விவரம் என் கையில் இல்லை தனிக் கேள்வி கேட்டால் சொல்லப்படும். சம்பந்தப்பட்ட தீ விபத்து நெல் அவித்துக்கொண்டிருந்த வீட்டில் தீப் பற்றி, மற்ற குடிசைகளுக்குப் பரவியிருக்கின்றது என்ற விவரம் என்னிடத்தில் இருக்கிறது.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : பேரவைத் தலைவர் அவர்களே, அடிக்கடி நம்முடைய மாநிலத்திலே தீயினாலும் வெள்ளத்தாலும் அதிகமாக குடிசைவாழ் மக்கள் பாதிக்கப் படுகிறார்கள். அப்போது இம்மாதிரி 200 ரூபாய் கொடுக் கிறார்கள். இந்த 200 ரூபாய் உண்மையிலேயே போதாது. எனவே, கலெக்டருக்கு உத்தரவு போட்டு கிராமப் பகுதிகளில் 3,000 ரூபாய் அளவிலே வீடுகள் கட்டுவதற்கு, அந்தக் கடனைக் கொடுக்க உடனடியாக அமுல்படுத்த அமைச்சர் அவர்கள் வழிவகை செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன் ?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : பேரவைத் தலைவர் அவர்களே, 100 ரூபாயிலிருந்து இப்பொது 200 ரூபாய் கொடுக்கப்படுகின்றது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. பி. துரைராஜ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தீப் பிடித்தால் நிவாரணமாக 200 ரூபாய் கொடுப்பதாகச் சொன்னார்கள். அது பாராட்டத்தக்கது. ஏழை எளிய தாழ்த்தப்பட்ட மக்கள் இந்த நிலையை அடையும்போது அவர்களுக்கு உடனடியாக வீடுகள் கட்டுவதற்கு 500 ரூபாய் தேவைப்படுகிறது. ஆகவே, இப்படி பலவிதமாக உதவிசெய்வதை உள்ளிட்டு, மொத்தமாக 500 ரூபாய் இந்த அரசாங்கம் கொடுத்தால், அதிலே தற்காலிக மாக ஒரு நல்ல குடிசையைக் கட்டிக் கொள்வார்கள். ஆகவே, இந்தத் திட்டத்தை அரசு பரிசீலனை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : பேரவைத் தலைவர் அவர்களே, தீப் பற்றிக் கொண்டால் ரூ. 2,000 வரைக்கும் தக்காவிக் கடன் கொடுக்கப்படுகிறது. தக்காவிக் கடனுக்கு வட்டி மிகவும் குறைவு. ஆதி திராவிட மக்களுக்கு தக்காவிக் கடனில் வட்டி இல்லை. மற்றவர்களுக்கு வட்டி உண்டு. ரூ. 2,000 வரை கொடுக்கிறோம். அதை வைத்துக்கொண்டு, அவர்கள் வீடுகள் கட்டிக்கொள்ள முடியும். அக்கடன் நீண்ட கால தவணையில் வசூலிக்கப்படுகின்றது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. தி. கா. நல்லப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரிசன குடியிருப்புகளைப் பொறுத்தவரையில் நெருக்கமான ஒரு இடத்தில் இருக்கிற காரணத்தால், ஒரு குடிசையில் தீப்பற்றிக் கொண்டால் மற்றக் குடிசைகளுக்கு அது பரவுகிறது. ஆகவே, அதை கவனத்திலே கொண்டு, இடம் ஒதுக்குவதோடு, கிராம வீடு கட்டும் கடனுக்கு அவர்களுக்கு முன்னுரிமை கொடுத்து வீடுகள் கட்ட ஆவன செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : பேரவைத் தலைவர் அவர்களே, முதலில் வீடு கட்டிக் கொள்பவர்கள் தங்கள் இஷ்டப்படி கட்டிக்கொள்வார்கள். இப்போது வீடுகளுக்கு மனை கொடுக்கின்றபோது ஒவ்வொரு வீட்டு மனைக்கும் இடையே இவ்வளவு இடைவெளி இருக்க வேண்டும், போக்குவரத்துக்கு இவ்வளவு இடம் என்பதையெல்லாம் பார்த்து வரைபடம் போட்டு, நிலப்பட்டா, வீட்டு மனைப்பட்டா கொடுக்கப்படுகின்றது.

திரு. எல். இளையபெருமாள் : பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் தீப்பற்றிக் கொண்டால் 2,000 ரூபாய் வட்டியில்லாமல் ஆதி திராவிட மக்களுக்கு கொடுப்பதாகச் சொன்னார்கள். ஆனால் சேத்துப்பட்டு, தென் ஆற்காடு மாவட்டத்திலே ஆவியனூர் போன்ற இடங்களில் இப்படிப்பட்ட கடன் வேண்டுமென்று கேட்டும் இதுவரையிலே கொடுக்கப்படவில்லை என்று அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா? ஆகவே அவர்களுக்கு அக்கடனை கொடுப்பதற்கு ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : பேரவைத் தலைவர் அவர்களே, அப்படி அவர்கள் கேட்டும் கொடுக்காமல் இருப்பதற்குக் காரணம் அமைச்சர் அவர்களுக்குத் தெரியவில்லை என்பதுதான் அர்த்தம். என்னிடத்திலே வந்திருந்தால் அதைப் பற்றி உடனடியாக நடவடிக்கை எடுத்து, அக் கடன் கொடுக்கப்படும்.

திருநெல்வேலி மற்றும் மாவட்டங்களில் 72:25 வாரச் சட்டத்தை அமுல் படுத்துதல்.

*வினா எண் 399 : திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டத்திலும் மற்றும பல மாவட்டங்களிலும் 75—25வாரச்— சட்டத்தை அமுல் படுத்த மறுக்கப்படுவதாகவும். அரசின் தலயீடு கோரியும், நெல்லை மாவட்ட